بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** *(அய்யதஹுல்லலாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

February 07 2014

**தமிழாக்கம் : மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப்**

# அஹ்மதி முஸ்லிம்களிடம் இருக்க வேண்டிய பண்புகள்

***தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

'ராஹே ஹுதா' என்ற நிகழ்ச்சி ஒவ்வொரு வாரமும் M.T.A.–வில் ஒளிபரப்பாகின்றது. அதில் பல்வேறு தலைப்புகளில் நமது ஆலிம்களும் முரப்பிகளும் உரையாடுகின்றனர். LIVE Calls மூலமாக கேள்வி–பதில் நிகழ்ச்சியும் நடக்கின்றது. அதில் ஜமாஅத்தைச் சாராத சகோதரர்களும் கேள்விகளைக் கேட்கின்றனர். கடந்த வார நிகழ்ச்சியின் சில பகுதிகளைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அப்போது ஜமாஅத்தைச் சாராத ஒருவரின் கேள்வியும் அதில் கேட்கப்பட்டது. அந்த நபர் தொலைபேசி அழைப்பு மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஓர் இல்ஹாம் தொடர்பாக இந்தக் கேள்வியைக் கேட்டார். ஒருவகையில் பார்க்கும் போது அது ஓர் ஆட்சேபனையாகும். அவர் தனது கருத்தைக் கூற ஆரம்பிக்கும் போது திருக்குர்ஆன் இறைவனின் வசனங்களாகும். இவ்வாறே சில நபிமொழிகள் உள்ளன. சான்றோர்களின் கூற்றுகள் உள்ளன. இவை அனைத்தையும் ஒன்றாக நாம் பார்க்கின்ற போது பரஸ்பரம் இவற்றிக்கிடையில் சீரான தொடர்பு இருப்பதைப் பார்க்க முடிகின்றது. ஆனால், அவர் கூற வந்த இல்ஹாமை அவர் எடுத்துக் கூறிய பிறகு, அதில் ஒன்றுக்கு மற்றொன்றுடன் சீரான தொடர்பு இல்லை அல்லது எங்களுக்கு அது புரியவில்லை என்று அவர் கூறினார்.

எவ்வாறிருப்பினும், இதுவும் ஆட்சேபனையின் ஒரு வகை தான். ஆட்சேபனை செய்யும் நிய்யத் அவரிடம் இல்லாவிட்டாலும் கூட அவர் அந்த கேள்வியைக் கேட்ட தொனியிலிருந்தும் அது ஆட்சேபனையாகத்தான் தோன்றுகிறது. (அரபி) இல்ஹாம் இதுவாகும்:

اَلَاۤ اِنَّ نَصۡرَ اللّٰہِ قَرِیۡبٌ۔ فِیْ شَآئِلِ مِقْیَاس 'பத்து நாட்களுக்குப் பிறகு நான் மகிழ்ச்சியைக் காட்டுவேன்'.

பிறகு தொடர்ந்து ஆங்கிலத்தில், 'Then, you will go to Amritsar' என்று வருகிறது.

பதில் கூறியவர்கள் சுருக்கமாக தங்களது பாணியில் இதற்கான பதிலைக் கூறியுள்ளனர். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சொற்களிலிருந்து இதற்கான விளக்கத்தைக் கூறுவது அவசியமானதாகும் என்று நான் கருதுகின்றேன். ஒருவேளை இதன் மூலம் ஆட்சேபனை செய்கின்ற மற்றவர்களும், குறைவான அறிவு உள்ளவர்களும் அல்லது குறைவான அறிவை உடைய இளைஞர்களும் கேள்வி கேட்டவரது – கேட்கின்ற தொனியின் தாக்கத்திற்கு ஆளாகி விடக்கூடாது அல்லது அதற்கான விளக்கத்தை அவர்கள் அறிய விரும்பலாம். இதுபோன்ற கேள்விகளை 'ராஹே ஹுதா' நிகழ்ச்சியில் ஜமாஅத்தைச் சாராத சகோதரர்கள் கேட்டுக் கொண்டு தான் இருக்கின்றார்கள். அதற்கு சில சமயங்களில் அப்போதே ஆலிம்கள் பதில் கூறி விடுகின்றனர். சில நேரங்களில் பதில் விளக்கமாகக் கூற வேண்டியதிருந்தால் அடுத்த நிகழ்ச்சியில் அது கூறப்படுகின்றது. எனவே, இதுபோன்ற கேள்விகள், ஆட்சேபனைகள் எழுப்பப்படும் போது அவற்றில் ஒவ்வொன்றிற்கும் நான் பதில் சொல்ல வேண்டும் என்ற தேவை எனக்கில்லை.

ஆனால், இந்த இல்ஹாமிற்கான விளக்கத்தை நான் கூறுவது எதற்கென்றால், கடந்த ஜுமுஆக்களில் நான் கொடுத்து வரும் குத்பாக்களின் தொடரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அடையாளங்கள், அன்னாருக்கு கிடைத்து வந்த இறை உதவி ஆகியவை நமது ஈமான் அதிகரிப்பதற்கும், மற்றவர்களது வாயை அடைப்பதற்கும் எந்த அளவு அதிகமான எண்ணிக்கையில் உள்ளன என்றால், இதில் நூற்றில் ஒரு பகுதி கூட மற்றவர்களிடம் இல்லை. எந்த விஷயத்தை அல்லது இல்ஹாமை இந்த நபர் எள்ளி நகையாட முயற்சி செய்துள்ளாரோ அந்த விஷயத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நூலான பராஹீனே அஹ்மதிய்யாவில் தனக்குரிய

ஒரு அடையாளமாக எடுத்துக் கூறியுள்ளார்கள். இவ்வாறே தஸ்கிராவிலும் இதைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மிகவும் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், கேள்வியைக் கேட்டவரது கேள்வியிலிருந்தும் குறைந்தபட்சம் அவர் இந்தக் கேள்வியை அல்லது ஆட்சேபனையை தஷ்கிராவை படித்த பிறகு செய்துள்ளார் என்பது தெரிய வருகிறது. ஆனால், அவர் இந்த இல்ஹாமிற்கு முன்னாலும் பின்னாலும் உள்ள பகுதிகளைப் படிக்கவில்லை அல்லது படித்திருந்தால் அதைப் பற்றி அவர் குறிப்பிடாமல் இருந்து விட்டார். அதன் மூலம் விஷயத்தைச் சுற்றி வளைத்து அவர் மற்றவர்களை குழப்பத்தில் ஆழ்த்துகின்றார் என்று தெரிகிறது.

பராஹீனே அஹ்மதிய்யாவிலும் ஏறக்குறைய இதே கருத்து தான் கூறப்பட்டுள்ளது. அதை அவர் படித்திருக்கமாட்டார். அது எத்தகைய நூல் என்றால் அதனை மிகுந்த கவனத்துடன் படிப்பது அவசியமானதாகும். இவரிடம் இதற்கான தகுதி இருப்பதாக நான் கருதவில்லை. எவ்வாறிருப்பினும், அசல் மேற்கோளை இப்போது எடுத்துக் கூறுகின்றேன். **1882** ஆம் ஆண்டு நடந்த சம்பவமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சிறிது காலத்திற்கு முன்பு ஒருமுறை எனக்கு மிகவும் அவசியமான தேவைக்காக பணம் தேவைப்பட்டது. இந்த தேவை பற்றி நம்முடன் இங்கு இருக்கின்ற ஆரியர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, வேறு வழியின்றி உள்ளத்தில் இந்த விருப்பம் பொங்கி எழுந்தது. அதாவது துன்பம் நீங்குவதற்காக ஏக இறைவனிடம் துஆ செய்ய வேண்டும். அந்த துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதன் மூலமாக ஒன்று நமது துன்பம் நீங்கி விட வேண்டும். மற்றொன்று எதிரிகளுக்காக இறை உதவியின் அடையாளம் தென்பட வேண்டும். அது எத்தகைய அடையாளமாக இருக்க வேண்டும் என்றால், அதன் உண்மைக்கு அந்த மக்கள் சாட்சிகளாக ஆகிவிட வேண்டும். அதற்காக அந்த நாளிலேயே துஆ செய்யப்பட்டது. இறைவனிடம் அடையாளமாக பொருள் உதவி கிடைப்பது தொடர்பான தகவலைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது. அப்போது (அரபியில்) இந்த இல்ஹாம் இறங்கியது. اَلَآ اِنَّ نَصْرَ اللّٰهِ قَرِيْبٌ ۔ فِیْ شَائِلٍ مِقْيَاسٍ 'பத்து நாட்களுக்குப் பிறகு நான் மகிழ்ச்சியைக் காட்டுவேன்'. (பிறகு ஆங்கிலத்தில்) Then you will to go Amritsar அதாவது பத்து நாட்களுக்குப் பிறகு பணம் வரும்.

அதாவது இந்த இல்ஹாமிற்கான விளக்கத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே கூறியுள்ளார்கள்: அதாவது பத்து நாட்களுக்குப் பிறகு பணம் வரும். இறைவனது உதவி அருகில் இருக்கிறது. எவ்வாறு குட்டியை ஈன்றெடுப்பதற்காக பெண் ஒட்டகம் தனது வாலை உயர்த்தும் போது அது குட்டியை ஈன்றெடுப்பது மிகவும் அருகாமையில் நடக்கப் போகிறதோ அவ்வாறே இறை உதவியும் அருகாமையில் இருக்கின்றது. பிறகு ஆங்கில சொற்றொடரில் அந்த நாளில் பணம் வந்த பிறகு நீ அமிர்தசரஸிற்குச் செல்வாய் என்று இறைவன் கூறியுள்ளான். எவ்வாறு இந்த முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்ததோ அவ்வாறே இந்துக்கள் அதாவது நான் மேலே குறிப்பிட்டுக் கூறியுள்ள ஆரியர்களுக்கு முன்பாக அது அப்படியே நடந்தது. முன்னறிவிப்பில் குறிப்பிட்டிருந்தபடி பத்து நாட்கள் வரை ஒரு அனா பைசா கூட வரவில்லை. பத்து நாட்கள் கடந்த பிறகு அதாவது பதினொன்றாம் நாளில் ராவல்பிண்டியைச் சார்ந்த பந்தோபஸ்திற்கான சூப்பரின்டென்டெண்ட் ஆன முஹம்மது அப்ஸல் கான் அவர்கள் **110** ரூபாய் அனுப்பி இருந்தார்கள். மேலும் இன்னொரு **20** ரூபாய் வேறொரு இடத்திலிருந்து வந்திருந்தது. பிறகு தொடர்ந்து பணம் வரும். தொடர் எவ்வாறு ஆரம்பமானது என்றால் அது பற்றிய எதிர்பார்ப்பு இருக்கவில்லை. பத்து நாட்கள் கடந்த பிறகு வந்த அதே நாளில் முஹம்மது அப்ஸல் கான் சாஹிப் போன்றோர் அனுப்பிய பணமும் வந்த பிறகு அமிர்தசரஸும் செல்ல வேண்டியது வந்தது. ஏனென்றால், அமிர்தசரஸிலுள்ள ஒரு நீதிமன்றத்திலிருந்து ஒரு வழக்கில் நான் சாட்சி கூற வேண்டும் என்பதற்காக அதே நாளில் இந்த எளியவனின் பெயரில் ஒரு சம்மனும் வந்தது. இதுதான் இந்த இல்ஹாம் பற்றிய முழு விபரமும் அதன் பின்னணியுமாகும்.

மேலும் இதுபற்றி இன்னோரிடத்தில் இதை தவிர இன்னொரு அடையாளத்தையும் குறிப்பிட்டுக் கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சிறிது நாட்களுக்கு முன்பு நூர் முஹம்மது என்ற பெயரில் ஒரு நபர் அமிர்தசரஸிலிருந்து வந்தார். இவர் ஹாபிஸும் ஹாஜியும் ஆவார். திருக்குர்ஆனை போதிப்பவரும் ஆவார். அரபியில் புலமையும் இவருக்கு இருந்தது. எளிமையான தோற்றத்தில் இருந்த அவர், தற்செயலாக பல இடங்களுக்கும் சுற்றித் திரிந்தவாறு இங்கும் வந்து சேர்ந்து விட்டார்கள். அவர் நம்முடன் இங்கேயே தங்கி இருந்தார். மேலும் அவர் இந்த இல்ஹாம் தொடர்பாக அவருக்கு இருந்து வரும் தவறான கருத்தை என்னிடமும் வெளிப்படுத்திக் கூறியிருந்தார். அதனால் எனக்கு மிகுந்த

துக்கம் ஏற்பட்டது. இவரது தவறான கருத்திற்குக் காரணமாக இவரது ஒரு ஆசிரியர் இருந்தார். அவர் ஒரு மவ்லவி ஆவார். அவரது பெயரைக் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யாவில் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். அவருக்கு, இறைநேசர்களுக்கு இல்ஹாம் வருவது தொடர்பாக சந்தேகம் இருந்தது என்று அவர் இவர்களிடம் கூறியிருந்தார். இதனால் நூர் அஹ்மது சாஹிப் அவர்களும் அவரது தாக்கத்திற்கு ஆளாகி இருந்தார். இதைப் பற்றியே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், அவருக்கு இல்ஹாம் இறங்குவது தொடர்பாக சில சந்தேகங்கள் இருந்தன என்று கூறுகின்றார்கள்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

எல்லா வகையிலும் அறிவுப்பூர்வமாக அவருக்கு இதைப் பற்றி புரிய வைத்த பிறகும் கூட அவரிடம் எந்த தாக்கமும் ஏற்படவில்லை. பிறகு இறுதியில் இறைவன் பக்கம் கவனம் செலுத்த வேண்டியது வந்தது. பிறகு இறைவனிடம் துஆ செய்யப்பட்டது. பிறகு அவரிடம் ஒரு முன்னறிவிப்பு நிறைவேறுவதற்கு முன்பாகவே அது பற்றி தெரிவிக்கப்பட்டது. அதாவது கருணையுள்ள இறைவனின் சமூகத்தில் துஆசெய்யப்படும். அந்த துஆ ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியை அடைந்து நீங்கள் கண்களால் பார்க்கப் போகின்ற ஒரு முன்னறிவிப்பை இறைவன் வெளிப்படுத்தப் போகின்றான் என்று அவரிடம் கூறப்பட்டது. அதற்காக அந்த இரவில் முழு வல்லமையுள்ள இறைவனிடம் துஆ செய்யப்பட்டது. சுபுஹ் நேரத்தில் கஷ்ஃப் காட்சியில் எனக்கு ஒரு கடிதம் காட்டப்பட்டது. அதனை ஒரு நபர் தபாலில் அனுப்பி இருந்தார். அந்த கடிதத்தில், ஆங்கில மொழியில் I am quarreler என்று எழுதப்பட்டிருந்தது. அரபியில், هَذَا شَاهِدٌ نَزَّاغٌ என்று எழுதப்பட்டிருந்தது. இந்த கடிதத்தை எழுதியவர் எழுதியிருந்த இதே இல்ஹாம் எனக்கு இறங்கியது. பிறகு இந்நிலை முடிந்து விட்டது. இந்த எளியவனுக்கு ஆங்கில மொழி பற்றி எதுவும் தெரியாததால் காலையில் இந்த கஷ்ஃப் மற்றும் இல்ஹாம் பற்றி மியான் நூர் அஹ்மது சாஹிப் அவர்களுக்கு தகவல் தெரிவித்து அதாவது எவர் இறை நேசர்களுக்கு இல்ஹாம் வருவது பற்றி சந்தேகத்தில் இந்தாரோ அவருக்கு, வரப்போகும் இந்த கடிதத்தைப் பற்றிய தகவலைத் தெரிவித்து விட்டு ஆங்கிலம் படிக்கத் தெரிந்த ஒரு நபரிடம் இந்த ஆங்கில இல்ஹாமிய சொற்களுக்கான பொருள் என்ன என்று கேட்கப்பட்டது. அப்போது அதற்கு நான் சண்டை போடப் போகின்றேன் என்பது பொருளாகும் என்பது தெரிய வந்தது.

இந்த சிறு சொற்றொடரிலிருந்தும் ஏதாவதொரு சண்டை தொடர்பாக ஒரு கடிதம் வரப்போகிறது என்பது உறுதியாகத் தெரிந்து விட்டது. எழுதுபவர் தரப்பிலிருந்தும் هَذَا شَاهِدٌ نَزَّاغٌ என்று எழுதப்பட்டிருந்த மற்றொரு சொற்றொடரைப் பார்த்த போது அதற்கான பொருள் இவ்வாறு எனக்கு தெரிய வந்தது. அதாவது இக்கடிதத்தை எழுதியவர் ஒரு வழக்கில் சாட்சி கூறுவதற்காக வேண்டி இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார் என்று தெரிய வந்தது. அதே நாளில் அமிர்தசரஸ் செல்லவிருந்த ஹாஃபிஸ் நூர் அஹ்மது சாஹிப் அன்று மழை பெய்ததால் செல்ல முடியவில்லை. உண்மையில் விண்ணிலிருந்து செய்யப்பட்ட ஏற்பாட்டின் காரணமாக அவர் போவது தடை செய்யப்பட்டதும் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான ஒரு செய்தியாக இருந்தது. அதன் மூலம் எவ்வாறு இறைவனிடம் அவருக்காக வேண்டப்பட்டதோ அவ்வாறே முன்னறிவிப்பு நிறைவேறுவதை தமது கண்களாலேயே அவர் பார்க்க வேண்டியதிருந்தது.

சுருக்கமாக, இந்த எல்லா முன்னறிவிப்புகள் பற்றிய விஷயங்களும் அவரிடம் கூறப்பட்டது. மாலையில் அவருக்கு முன்னால் ஸபீரே ஹிந்து என்ற அச்சகத்தின் உரிமையாளரான பாதிரி ரஜப் அலி சாஹிப் அவர்களிடமிருந்து பதிவுத் தபாலில் ஒரு கடிதம் அமிர்தசரஸில் இருந்து வந்திருந்தது. அதில் பாதிரியார், இந்த நூலை எழுதியவர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது தெரிய வந்தது. மேலும் இந்த எளியவனை இதனோடு தொடர்புடைய ஒரு சம்பவத்திற்குச் சாட்சியாக ஆக்கி இருப்பதும் தெரிய வந்தது. அத்துடன் ஒரு அரசாங்க சம்மனும் வந்திருந்தது. இந்தக் கடிதம் வந்த பிறகு هَذَا شَاهِدٌ نَزَّاغٌ இந்த சாட்சி அழிவை ஏற்படுத்தக்கூடியதாகும் என்ற இந்த இல்ஹாம் எவ்வாறு நிறைவேறியது என்றால் ஸபீரே ஹிந்து அச்சகத்தின் உரிமையாளரான பாதிரியாரின் உள்ளத்தில் முழுமையான நிச்சய உறுதியுடன் இந்த விஷயம் பதிந்து விட்டது. அதாவது இந்த எளியவனின் சாட்சியம் சரியானதாகவும் நடந்த சம்பவத்திற்கு ஏற்பவும் இருக்கும். அந்த சாட்சி தெளிவானதாகவும், உண்மையானதாகவும், கண்ணியத்திற்குரியதாகவும் இருக்கின்ற காரணத்தால் எதிர் தரப்பில் உள்ளவர்களிடம் அது அழிவை ஏற்படுத்தும் என்ற உறுதி அவருக்கு இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாக்குமூலம் எல்லா வகையிலும் முக்கியம் வாய்ந்ததாகத் திகழும். அதன் அடிப்படையில் அந்த சாட்சியம் மற்ற பிரிவினர் மீது அழிவை ஏற்படுத்தும் என்று அவர் கருதினார். இந்த எண்ணத்தின் காரணமாகவே பாதிரியார் அவர்கள் இந்த எளியவன் சாட்சி கூறுவதற்காக வர வேண்டும் என்று வேண்டி இருந்தார். அதற்கான சம்மனை அனுப்பி இருந்தார். தற்செயலாக எந்த நாளில் இந்த முன்னறிவிப்பு

நிறைவேறியதோ, மேலும் அமிர்தசரஸ் செல்வதற்காக பயணம் மேற்கொள்ள வேண்டியது வந்ததோ அதே நாள் தான் இதற்கு முன்னர் கூறப்பட்ட முன்னறிவிப்பும் நிறைவேற வேண்டிய நாளாக இருந்தது. அந்த முன்னறிவிப்பும் கூட மியான் நூர் அஹ்மது சாஹிப் அவர்களுக்கு முன்பாகவே நிறைவேறியது. அதாவது பத்து நாட்கள் கடந்த பிறகு வந்த அதே நாளில் பணமும் வந்தது. அமிர்தசரஸும் செல்ல வேண்டியது வந்தது. அல்ஹம்துலில்லாஹி அலா ஸாலிக்.

இன்று நான் அடையாளங்கள் தொடர்பாக இந்த விஷயங்களைக் கூற வேண்டும் என்று விரும்பி இருந்தேன். நான் ஏற்கனவே கூறியிருந்தது போன்றே 'ராஹே ஹுதா' நிகழ்ச்சியில் கேட்கப்பட்ட ஒரு கேள்வியினால் இதுபற்றி கூற வேண்டியது வந்தது. இனி அடையாளங்கள் தொடர்பாக எடுத்துக் கூறுவேன்; இன்ஷா அல்லாஹ். இதற்குப் பிறகு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தின் செயல் நிலைமை தொடர்பாக அவர்களுக்கு இருந்த கவலை தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எடுத்துக் கூறியுள்ள சில மேற்கோள்களை எடுத்துக் கூறுவேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது போதனையையும், எதிர்பார்ப்புகளையும் நான் எடுத்துக் கூறுவதற்கு முன்பாக ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாழ்க்கையிலிருந்தும் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார்கள். அதை நான் எடுத்துக் கூறுவேன். இதுவும் கூட அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது செய்துள்ள அருளும் பேருபகாரமும் ஆகும். அதாவது காலத்தின் கலீஃபாவுக்கு ஏதாவதொரு விஷயத்தின் பக்கம் கவனம் ஏற்படும் போது அதில் சீர்திருத்தம் தொடர்பான அம்சங்கள் இருந்தால் ஜமாஅத்தின் பெரும் பகுதியினர் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்த ஆரம்பித்து விடுகின்றனர். எனக்கு வருகின்ற கடிதங்கள் மூலமாக எனக்கு அதை கணித்துப் பார்க்க முடிகின்றது.

பிறகு சில உதவியாளர்களை அல்லாஹ் கிலாஃபத்திற்கு வழங்கியுள்ளான். அவர்கள் தங்களது நினைவாற்றலுக்கேற்ப சில மேற்கோள்களை எடுத்து எனக்கு அனுப்புகின்றார்கள். இந்த மேற்கோள்களை இதற்கு முன்பு நாம் படித்திருந்தாலும் கூட அவை நமது பார்வையிலிருந்து மறைந்து விடுகின்றன. எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாழ்க்கையிலிருந்தும் நான் சிலவற்றை எடுத்துக் கூறும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெளிப்படுத்தியிருந்த அவர்களது கவலை பற்றியும் கூறுவேன். இதனை நம்முடைய ஒரு முரப்பி சாஹிப் அவர்கள் எனக்கு அனுப்பியுள்ளார்கள். நீங்கள் செயல் சீர்திருத்தத்தின் முக்கியத்துவம் பற்றி கூறிக் கொண்டிருக்கும் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக வெளிப்படுத்தியிருந்த கவலையை எடுத்துக் காட்டும் ஒரு மேற்கோளையும் உங்கள் முன் வைக்கின்றேன் என்று அவர்கள் எழுதியுள்ளார்கள். அல்லாஹ் அவருக்கும் நற்கூலி வழங்குவானாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாழ்க்கையில் இருந்தும் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எடுத்துக் கூறியுள்ள மேற்கோள் இதுவாகும். அவர்கள் கூறுகின்றார்கள்:

என்னிடம் மவ்லவி ஸர்வர் ஷா சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஒருமுறை ஒரு பணி தொடர்பாக மீர் நாஸிர் நவாப் சாஹிபிற்கு மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. மீர் சாஹிப் அவர்கள் கோபமடைந்து உள்ளே சென்று ஹஸ்ரத் சாஹிபிடம் இது தொடர்பாக தகவல் தெரிவித்தார்கள். இவ்வாறு எங்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது என்று கூறி தமது கோபத்தை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்களுக்கு இதுபற்றி தகவல் தெரிந்ததும் அவர்கள் ஹஸ்ரத் சாஹிபிடம் அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நாங்கள் இங்கு ஹுஸூருக்காக வேண்டியே வந்துள்ளோம். ஹுஸூர் அவர்களின் சமூகத்தில் இருந்தவாறு மார்க்கத்திற்கு ஏதாவதொரு தொண்டினைச் செய்கின்ற சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வந்துள்ளோம். ஆனால், ஹுஸூர் வரை எங்களைப் பற்றிய புகார்கள் இவ்வாறு வந்து கொண்டே இருந்தால் ஹுஸூரும் மனிதன் தான். ஹுஸூர் அவர்களது உள்ளத்தில் ஏதாவதொரு சமயத்தில் எங்களைப் பற்றிய ஏதாவதொரு விஷயம் உருவாகலாம். அப்போது காதியான் வருவதன் மூலம் எங்களுக்கு பலன் கிடைப்பதற்குப் பதிலாக அதற்கு நேர்மாற்றமாக எங்களுக்கு இழப்பு ஏற்படும். அப்போது ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் கூறினார்கள்: மீர் சாஹிப் சில சமயத்தில் நான் எனக்கு ஏற்பட்டிருந்த கவலையில் எந்த அளவு ஆழ்ந்திருந்தேன் என்றால் நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். எனக்கு மீர் சாஹிப் என்ன கூறினார்? என்ன கூறவில்லை? என்று எதுவுமே தெரியாது.

*பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:*

சில நாட்களாக ஓர் எண்ணம் மிகவும் வலுவாக என்னிடம் ஏற்பட்டுள்ளது. அது மற்ற விஷயங்களிலிருந்தும் என்னை முற்றிலும் விலக்கி வைத்து விட்டது.

இது மிகவும் கவனத்துடன் கேட்க வேண்டிய விஷயமாகும்.

எனவே ஒவ்வொரு சமயத்திலும் உட்காரும் போதும், எழும் போதும் அதே எண்ணம் தான் எனது உள்ளத்தில் இருக்கின்றது. நான் வெளியில் மக்களுடன் அமர்ந்திருக்கும்போது ஏதாவதொரு நபர் என்னிடம் பேசிக் கொண்டிருக்கும் போது அந்த சமயத்திலும் கூட எனது மூளையில் அதே எண்ணம் தான் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருக்கிறது. அந்த நபரோ அவர் கூறுவதை நான் கேட்கின்றேன் என்று நினைத்துக் கொண்டிருப்பார். ஆனால் நானோ இந்த எண்ணத்தில் மூழ்கியிருப்பேன். நான் வீட்டிற்குச் செல்லும் போதும் கூட அங்கும் அதே எண்ணம்தான் என்னுடன் இருக்கும்.

சுருக்கமாக, இந்த நாட்களில் இந்த எண்ணம் எனது மூளையில் எந்த அளவு வலுவாக மிகைத்து நிற்கின்றதென்றால் வேறொரு எண்ணம் தோன்றுவதற்கான வாய்ப்பே இல்லாமல் போய் விட்டது. அந்த எண்ணம் எது? அது இதுவாகும். அதாவது எனது வருகையின் அசல் நோக்கம் என்ன? எனது வருகையின் அசல் நோக்கம் இதுவாகும். அதாவது உண்மையான நம்பிக்கையாளர்கள் உள்ள ஒரு ஜமாஅத் தயாராகி விட வேண்டும். அவர்கள் இறைவன் மீது உண்மையான முறையில் நம்பிக்கை வைக்க வேண்டும். அவனுடன் உண்மையான தொடர்பை வைத்திருக்க வேண்டும். இஸ்லாத்தை தனது அடையாளமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகிய முன்மாதிரிக்கேற்ப செயல்பட வேண்டும். சீர்திருத்தம் மற்றும் தக்வாவின் வழிகளில் செல்ல வேண்டும். ஒழுக்கத்தின் உயர்வான முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டும். பிறகு அத்தகைய ஜமாஅத்தின் மூலமாக உலகம் நேர்வழியைப் பெற வேண்டும். இறைவனின் நாட்டம் நிறைவேற வேண்டும்.

எனவே, இந்த நோக்கம் நிறைவேறவில்லை என்றால் நாம் ஆதாரங்கள் மற்றும் தெளிவுகள் மூலம் நமது எதிரிகள் மீது வெற்றி அடைந்து விட்டாலும் கூட, அவர்களை முழுமையாக நமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து விட்டாலும் அதற்குப் பிறகும் கூட நமது வெற்றி எவ்விதத்திலும் வெற்றியல்ல. ஏனென்றால் நமது வருகையின் அசல் நோக்கம் நிறைவேறவில்லை என்றால் நமது எல்லா பணிகளுமே வீணாகி விட்டன. ஆனால் நான் பார்க்கின்றேன். ஆதாரங்கள் மற்றும் தெளிவுகள் மூலமாக கிடைக்கின்ற வெற்றிக்கான அடையாளங்கள் பெரிதாக வெளிப்படுகின்றன. எதிரிகளும் கூட தமது பலவீனத்தை உணரத் தொடங்கியுள்ளனர். ஆனால் நமது வருகையின் அசல் நோக்கத்தை நிறைவடையச் செய்வதைப் பொருத்தவரையில் அதுபற்றி ஜமாஅத்தில் மிகவும் குறைபாடு இருக்கின்றது. மேலும் மிகுதியான கவனம் செலுத்துதல் அவசியமானதாகும். எனவே இந்த எண்ணம் தான் இன்று என்னை தின்று கொண்டிருக்கின்றது. இந்த எண்ணம் என்னிடம் எந்த அளவு மிகைத்து நிற்கின்றதென்றால் எந்த சமயத்திலும் அது என்னை விட்டு விடுவதில்லை.

ஆக, இந்த வேதனைதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நிம்மதியிழக்கச் செய்திருந்தது. பல்வேறு சமயங்களில் அவர்கள் ஜமாஅத்திற்குப் பல அறிவுரைகளைக் கூறியுள்ளார்கள். ஓர் அஹ்மதி எப்படி இருக்க வேண்டும்? என்று கூறியுள்ளார்கள். அன்னாரது மற்ற நூல்களைத் தவிர்த்து மல்ஃபூஸாத்தின் 10 தொகுதிகள் உள்ளன. அவற்றில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சபைகள் பற்றிய அறிக்கை சுருக்கமாக இருக்கும். விரிவாக அது இருக்காது. அவை 10 பாகங்களாக இருக்கின்றது. இந்த 10 பாகங்களிலிருந்து எந்தவொரு பாகத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். ஜமாஅத்தின் மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வைத்திருந்த எதிர்பார்ப்புகள், ஜமாஅத்திற்கு அன்னார் செய்திருந்த போதனைகள், செயல் நிலைமையில் மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பான கருத்து ஆகியவற்றைப் பல்வேறு மேற்கோள்கள் மூலம் பல கோணங்களில் தமது ஒவ்வொரு சபையிலும் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். அவற்றில் சிலவற்றை இப்போது நான் எடுத்துக் கூறுகின்றேன்.

***ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நீங்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் ஒற்றுமையாக இருங்கள். பரஸ்பரம் ஒருவர் மற்றவரை நேசிக்க வேண்டும். இதனை இதற்கு முன்னர் பலமுறை நான் கூறிவிட்டேன். நீங்கள் பரஸ்பரம் உங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துங்கள். கூட்டமைப்பாக செயல்படுங்கள். இறைவன் முஸ்லிம்களுக்கு இந்த போதனையைத்தான் வழங்கியுள்ளான். நீங்கள் ஒன்றுபட்டு இருங்கள். அவ்வாறில்லையென்றால், உங்களது ஆற்றல் குறைந்து விடும். இதனால் தான் தொழுகையில் ஒருவர் மற்றவருடன் சேர்ந்து ஒன்றாக நிற்க வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. அதன் மூலம் உங்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டும். மின்சாரத்தைப் போன்று ஒருவரது நன்மை மற்றவரிடம் ஊடுருவி விட வேண்டும். கருத்து வேறுபாடு இருந்தால், ஒற்றுமை இல்லாமல் இருந்தால் பிறகு நீங்கள் பாக்கியமற்றவர்களாக ஆகி விடுவீர்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். உங்களில் பரஸ்பரம் ஒருவர் மற்றவரிடம் அன்பு காட்டுங்கள். உங்களில் ஒருவர் மற்றவருக்காக மறைவான முறையில் துஆ செய்யுங்கள்.

இதனை நாம் ஆய்வு செய்து பார்ப்பது அவசியமானதாகும். நம்மில் எத்தனை பேர் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்காக மறைவான முறையில் துஆ செய்கின்றோம்? என்று பார்க்க வேண்டும். ஒரு நபர் மறைவான முறையில் மற்றவருக்காக துஆ செய்யும் போது மலக்கு உனக்கு அவ்வாறே ஆகட்டும் என்று கூறுகின்றார். இது எவ்வளவு உயர் தகுதியிலுள்ள விஷயமாக இருக்கின்றது? மனிதனின் துஆ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றாலும் கூட மலக்கின் துஆ ஏற்றுக் கொள்ளப்படும். நான் போதனை செய்கின்றேன். இதைக் கூற விரும்புகின்றேன். உங்களில் பரஸ்பரம் ஒருவர் மற்றவரிடம் கருத்து வேறுபாடு கொள்ள வேண்டாம்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நான் இரண்டு விஷயங்களைத்தான் கொண்டு வந்துள்ளேன். முதலாவதாக, இறைவனின் நெருக்கத்தைப் பின்பற்றிச் செல்லுங்கள். இரண்டாவதாக, உங்களுக்கு மத்தியில் அன்பு மற்றும் அனுதாப உணர்வை வெளிப்படுத்திக் காட்டுங்கள். மற்றவர்களுக்கு அற்புதமாகத் திகழ்கின்ற அந்த முன்மாதிரியைக் காட்டுங்கள். இந்த ஆதாரம் தான் சஹாபாக்களிடம் உருவாகி இருந்தது.

كُنْتُمْ اَعْدَآءً فَاَلَّفَ بَيْنَ قُلُوْبِكُمْ

*நீங்கள் ஒருவருக்கொருவர் பகைவர்களாக இருந்தீர்கள். அவன் உங்களது உள்ளங்களில் நட்பை உண்டாக்கினான். (3:104)*

நினைவில் கொள்ளுங்கள்! இந்த பரிவு காட்டுவது அல்லாஹ்வின் ஒரு அற்புதமாகும். நினைவில் கொள்ளுங்கள்! உங்களில் ஒவ்வொருவரும் தமக்காக விரும்புவதையே தனது சகோதரனுக்காகவும் விரும்பாத வரையில் அவர் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்ல. அவர் துன்பத்திலும் துயரத்திலும் இருக்கின்றார். அவரது முடிவு நல்லதாக இருக்காது.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நினைவில் கொள்ளுங்கள்! காழ்ப்புணர்ச்சி அகல்வது மஹ்தியின் அடையாளமாகும். என்ன? இந்த அடையாளம் நிறைவேறாமல் போய் விடுமா? கண்டிப்பாக அது நிறைவேறும். நீங்கள் ஏன் பொறுமையைக் கடைபிடிப்பதில்லை? இது மருத்துவத்திலுள்ள ஒரு விஷயமாகும். எதுவரை சில நோய்களின் அடையாளங்கள் முற்றிலுமாக அழிக்கப்படாமல் இருக்குமோ அதுவரை அந்த நோய் விலகாமலேயே இருக்கும். என் மூலமாக நல்லவர்களின் ஒரு ஜமாஅத் உருவாகும் இன்ஷா அல்லாஹ். பரஸ்பரம் உங்களில் ஒருவர் மற்றவருடன் பகைமை கொள்வதற்கான காரணம் என்ன? கஞ்சத்தனம், அகங்காரம், சுயநலம், உணர்வுகள் ஆகியவைதான் இதற்கான காரணங்களாகும். தங்களுக்கிடையில் சகோதர உணர்வுடனும் அன்புடனும் நடந்து கொள்ளாமல், தங்களது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாத அத்தகைய எல்லா மக்களையும் எனது ஜமாஅத்தை விட்டும் தனியாகப் பிரித்தெடுத்து விடுவேன். இத்தகைய நிலை இருக்கின்றது என்றால் அவர்கள் சில நாட்கள் தான் விருந்தாளிகளாக இருக்கப் போகின்றார்கள் என்பதை அவர்கள் நினைவில் கொள்ளட்டும்! எதுவரை சிறந்த முன்மாதிரியை நீங்கள் காட்டவில்லையோ அதுவரை எவர் காரணமாகவும் என் மீது ஆட்சேபனை செய்யப்படுவதை நான் விரும்பவில்லை. எந்த நபர் எனது ஜமாஅத்தில் இருந்து கொண்டு எனது விருப்பத்திற்கேற்ப செயல்படாமல் இருந்தால் அவர் காய்ந்துபோன கிளையாக இருக்கின்றார். அதனை தோட்டக்காரன் வெட்டாமல் வேறு என்ன செய்வாய்? காய்ந்து போன கிளை மற்ற செழிப்பான கிளைகளுடன் இருந்தவாறு தண்ணீரை உறிஞ்சலாம். அது அவற்றை பசுமையானதாக ஆக்க முடியாது. மாறாக அந்த கிளை மற்றவற்றை அழித்து விடும். எனவே, அஞ்சுங்கள். தனக்கு சிகிச்சை செய்யாமல் இருப்பவர் என்னுடன் இருக்க மாட்டார்.

இந்த மேற்கோளை இதற்கு முன்னரும் நாம் பலமுறை கேட்டுள்ளோம். படித்துள்ளோம். ஆனால் இந்த மேற்கோள்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது வேதனையை வெளிப்படுத்திக் கூறியுள்ள அந்த மேற்கோளுடன் சேர்த்துப் படித்துப் பாருங்கள். அதில் அவர்கள் ஜமாஅத்தில் செயல் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்பதைத் தவிர வேறு எதைப் பற்றிய எண்ணமும் எனக்கில்லை என்று கூறுகின்றார்கள். இதனால் அவர்களுக்கு குறிப்பாக கவலை ஏற்பட்டுள்ளது. பிறகு எந்த சமயத்தில் ஒரு மனிதரை உண்மையான நம்பிக்கையாளர் என்று கூற முடியும் என்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் திறந்து கூறுகின்றேன். எதுவரை ஒவ்வொரு விஷயத்தையும் விட அல்லாஹ்வுக்கு ஒருவர் முன்னுரிமை வழங்காமலும் தனது உள்ளத்தால் எனது இறைவன் என்னுடையவனாக ஆகிவிட்டான் என்பதை பார்க்கவில்லையோ அதுவரை ஒருவரை உண்மையான மூஃமின் என்று கூற முடியாது. அப்படிப்பட்ட மனிதரை பொதுவாக நாம் மூஃமின் என்றும் முஸ்லிம் என்றும் கூறுகின்றோம். இவ்வாறு தெரு பெருக்குகின்றவர்களைக் கூட நாம் முஸ்லிம் என்று

கூறுகின்றோம். ஆனால் முஸ்லிம் என்பவர் أَسْلَمَ وَجْهَهُ لِلّٰهِ தன்னை அல்லாஹ்வுக்காக அர்ப்பணித்தவர் என்பதற்கு பொருந்தக் கூடியவராவார். *வஜ்ஹி* என்பது முகத்திற்கு கூறப்படுகின்றது. ஆனால் ஒன்றாக இருப்பதையும் இது குறிக்கம். எவர் தனது எல்லா ஆற்றல்களையும் அல்லாஹ்வின் முன்பு வைத்து விடுகின்றாரோ அவர் உண்மையான முஸ்லிம் என்று கூறுவதற்குத் தகுதி உடையவராவார்.

எனக்கு நினைவில் வருகின்றது. ஒரு முஸ்லிம் ஒரு யூதரை இஸ்லாத்திற்கு அழைத்தார். நீ முஸ்லிம் ஆகி விடு என்றார். ஆனால், இஸ்லாத்தின் பக்கம் அழைத்த அந்த முஸ்லிம் தீமையிலும் குழப்பத்திலும் மூழ்கியிருந்தார். யூதர் அந்த குழப்பவாதியான முஸ்லிமிடம் முதலில் நீங்கள் உங்களைப் பாருங்கள். நீங்கள் முஸ்லிம் என்று உங்களை கூறிக் கொள்வதில் தற்பெருமை கொள்ள வேண்டாம். இறைவன் இஸ்லாத்தின் சத்தையே விரும்புகின்றான். அதன் பெயரையும் சொல்லையும் மட்டும் விரும்புபவனாக அவன் இல்லை என்று கூறினார்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நினைவில் கொள்ளுங்கள்! செயல் இல்லாத வரை சொற்களைக் கூறுவது நாவால் பேசுவது ஆகியவை மட்டும் எந்தப் பலனையும் தராது. பேசுவது மட்டும் இறைவனிடத்தில் எவ்வித தகுதியையும் பெற முடியாது. இறைவன் கூறுகின்றான்:

كَبُرَ مَقْتًا عِندَ اللّٰهِ أَن تَقُولُوا مَا لَا تَفْعَلُونَ

*நீங்கள் செய்யாததைக் கூறுவது இறைவனிடத்தில் மிகவும் வெறுக்கத்தக்கதாகும். (61:4)*

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நீங்கள் இஸ்லாத்திற்குத் தொண்டு செய்ய விரும்பினால் முதலில் நீங்கள் உங்களிடம் தக்வாவையும் தூய்மையையும் ஏற்படுத்துங்கள்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: இது திருக்குர்ஆனிலுள்ள சூரா ஆலி இம்ரானின் வசனங்களாகும். எவ்வாறு எதிரிகளை எதிரிடுவதற்கு எல்லைப் புறங்களில் குதிரை இருக்க வேண்டியது அவசியமானதாக இருக்கின்றதோ, அதன் மூலம் எதிரிகள் வரம்பை மீறி வர முடியாமல் இருக்கின்றதோ அவ்வாறே நீங்களும் தயாராக இருங்கள். எதிரிகள் எல்லைப் புறங்களைத் தாண்டி வந்து இஸ்லாத்திற்கு துக்கத்தைக் கொடுக்கக் கூடாது. எனவே, நான் இதற்கு முன்னரும் கூறியுள்ளேன். நீங்கள் இஸ்லாத்திற்கு உதவியும் தொண்டும் செய்ய விரும்பினால் முதலில் நீங்கள் தக்வாவையும் தூய்மையையும் மேற்கொள்ளுங்கள். அதன் மூலம் நீங்களே இறைவனின் அடைக்கலம் மூலம் அவனது பாதுகாப்புக் கோட்டைக்குள் வந்து விடுவீர்கள். பிறகு நீங்கள் இந்தத் தொண்டைச் செய்வதற்கான நற்பேற்றையும் தகுதியையும் பெறுவீர்கள். முஸ்லிம்களின் வெளிப்புற ஆற்றல் எவ்வளவு பலவீனமானதாக ஆகி விட்டது என்பதை பார்க்கின்றீர்களா? சமுதாயங்கள் அவர்களை வெறுப்பு மற்றும் இழிவான பார்வையால் பார்க்கின்றது.

இன்று நாம் பார்க்கும் போது முன்பை விட மோசமாக இந்த நிலை இருக்கின்றது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

உங்களது அந்தரங்க ஆற்றலும் உள்ளத்தின் ஆற்றலும் பலவீனமானதாகவும் கீழ்நிலையிலும் இருந்தால் பிறகு உங்களுக்கு முடிவு வந்து விட்டது என்று கருதிக் கொள்ளுங்கள். நீங்கள் உங்களது நஃப்ஸை எந்த அளவு தூய்மையானதாக ஆக்க வேண்டும் என்றால் தூய்மைப்படுத்தும் ஆற்றல் அவற்றில் ஊடுருவி விட வேண்டும். அது எல்லைப் புறங்களிலுள்ள குதிரைகள் போன்று வலிமை மிக்கவையாகவும் பாதுகாக்கின்றவையாகவும் ஆகிவிட வேண்டும்.

அல்லாஹ்வின் அருள் எப்போதும் இறையச்சம் உடையவர்களுடனும் நேர்மையானவர்களுடனும் இருக்கின்றது. உங்களுடைய ஒழுக்கத்தையும் பண்புகளையும் இஸ்லாத்தின் மீது கறை படியும் வகையில் ஆக்கிக் கொள்ளாதீர்கள். தீயவர்கள் மூலமாகவும் இஸ்லாத்தின் போதனைகளுக்கேற்ப செயல்படாத முஸ்லிம்கள் மூலமாகவும் இஸ்லாத்தின் மீது கறை படிகின்றது. ஒரு முஸ்லிம் குடிக்கின்றார். வாந்தி எடுத்துக் கொண்டு திரிகின்றார். தலைப்பாகை கழுத்தில் இருக்கும். அழுக்கு நிறைந்துள்ள சாக்கடைகளில் அவர்கள் வீழ்ந்து கிடக்கின்றனர். போலீஸிடமிருந்து செருப்படி கிடைக்கின்றது. இந்துக்களும் கிறிஸ்தவர்களும் அவர்களைப் பார்த்து சிரிக்கின்றனர். ஷரீஅத்திற்கு மாற்றமான அவரது இத்தகைய செயல் அவரது ஏளனத்திற்கு மட்டும் காரணமாக இருக்காது. மாறாக, இதற்குப் பின்னால் இதன் தாக்கம் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துகின்றது. எனக்கு இப்படிப்பட்ட செய்திகளையும் சிறைச் சாலையுடன் தொடர்புடைய அறிக்கைகளையும் படிக்கும் போது மிகுந்த வேதனை ஏற்படுகின்றது. தங்களது தீய செயல்களின்

காரணமாக முஸ்லிம்கள் இந்த அளவு தண்டனைக்கு ஆளாகியுள்ளனர் என்பதைப் பார்க்கும் போது உள்ளம் அமைதியிழந்து விடுகிறது. நேரான வழியைப் பெற்றிருக்கும் இந்த மக்கள் தங்களது தீய கொள்கைகளின் காரணமாக தங்களுக்கு மட்டும் இழப்பை ஏற்படுத்துவதில்லை. மாறாக இஸ்லாதைப் பரிகாசம் செய்வதற்கு அவர்கள் காரணமாக இருக்கின்றனர். நான் கூற வந்தது என்னவென்றால், முஸ்லிம்கள் தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டு இறைவன் தடுத்துள்ள இந்த விஷயங்களைச் செய்கின்றனர். இதன் மூலம் அவர்களை மட்டுமின்றி இஸ்லாதையும் சந்தேகத்திற்குரியாக ஆக்கி விடுகின்றனர்.

எனவே, நீங்கள் உங்களது நடைமுறைகளை ஒழுக்கங்களை எவ்வாறு ஆக்கிக் கொள்ள வேண்டும் என்றால் நிராகரிப்பவர்களுக்கு உங்கள் மீது எந்தவொரு ஆட்சேபனையும் செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்து விடக்கூடாது. உண்மையில் அது இஸ்லாத்தின் மீது செய்யப்படும் ஆட்சேபனையாகவே இருக்கும். இன்றைய நாட்களில் இதுபோன்ற ஆட்சேபனைகள் தான் செய்யப்படுகின்றன. திருக்குர்ஆனின் போதனைகள் இதுதான் என்றால், முஸ்லிம்களின் செயல் அதற்கேற்ப ஏன் இல்லை? என்ற கேள்வியும் ஆட்சேபனையும் தான் நாம் எங்கு சென்றாலும் எழுப்பப்படுகிறது. இன்றைய நாட்களில் அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் தங்களது நிலைமைகளை மாற்றியவாறு இந்த ஆட்சேபனைகளை அகற்ற வேண்டும். இதற்காக நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நன்றி செலுத்துவது தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:***

நன்றி செலுத்த வேண்டும் என்றால், தக்வாவையும் தூய்மையையும் பேண வேண்டும்.

***அவர்கள் கூறுகின்றார்கள்:*** உங்களது அசல் நன்றி செலுத்துதல் என்பது தக்வாவையும் தூய்மையையும் பேணுவதேயாகும்.

முஸ்லிம்களிடம் இதுபற்றி கேட்கும் போது அல்ஹம்துலில்லாஹ் என்று கூறுவது மட்டும் உண்மையான நன்றி செலுத்துதல் ஆகாது. நீங்கள் முஸ்லிமா? என்று கேட்டால் அல்ஹம்துலில்லாஹ் நாங்கள் முஸ்லிம்களாக இருக்கின்றோம் என்று கூறுவது மட்டும் உண்மையான நன்றி செலுத்துவதாக ஆக முடியாது. நீங்கள் உண்மையாக நன்றி செலுத்தும் வகையில் தக்வா மற்றும் தூய்மையின் வழிகளை மேற்கொண்டு நடந்தால், நீங்கள் எல்லைப் புறங்களில் நிற்கின்றீர்கள். யாரும் உங்கள் மீது வெற்றி பெற முடியாது என்ற நற்செய்தியை நான் உங்களுக்கு தெரிவிக்கின்றேன்.

எனக்கு நினைவில் இருக்கின்றது. எழுத்தராக இருந்த காழ்ப்புணர்ச்சியுள்ள ஓர் இந்து அதிகாரி இருந்தார். அவரது பெயர் ஜெகநாத் ஆகும். அவர் என்னிடம் கூறினார். அவர் அமிர்தசரஸிலோ அல்லது வேறு ஏதோவொரு இடத்திலோ எழுத்தராகப் பணிபுரிந்து வந்தார். அங்கு வசித்து வந்த இன்னொரு இந்து மறைவாக இருந்தவாறு தொழுது வந்தார். இந்துவாக இருந்தவர் முஸ்லிம் ஆகி விட்டார். ஆனால் தன்னை வெளிப்படையாக முஸ்லிம் என்று காட்டிக் கொள்ளவில்லை. தொழுகைகளை முறையாக தொழுது வந்தார்.

அந்த அரசு அதிகாரி கூறுகின்றார்: நானும் மற்ற எல்லா இந்துக்களும் அவரை மிகவும் தீயவராகக் கருதினோம். அங்கு வசித்து வந்த நாங்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து இவரை எப்படியாவது பிடித்துக் கொடுக்க வேண்டும் என்று எண்ணியிருந்தோம். அவரை அவரது தொழிலிலிருந்து அகற்ற நாடினோம். எல்லாரையும் விட அதிகமாக எனது உள்ளத்தில் தான் தீங்கு விளைவிக்கும் எண்ணம் இருந்தது. நான் பலமுறை உயர் அதிகாரிகளிடம் அவர் இன்னின்ன தவறுகளைச் செய்துள்ளார் என்று புகார் கூறி வந்தேன். இவர் இவ்வாறு மாற்றமாக செயல்பட்டுள்ளார் என்று கூறி வந்தேன். ஆனால், அவர் பக்கம் எவரும் திரும்பியும் பார்க்கவில்லை. மேலதிகாரிகள் அந்த புகார்கள் மீது கவனம் செலுத்தவில்லை. ஆனால் நிச்சயமாக அவரை பணியிலிருந்து அகற்ற வேண்டும் என்று நாங்கள் எண்ணியிருந்தோம். எங்களது இந்த எண்ணத்தில் வெற்றி பெறுவதற்காக அவரது பல குறைகளையும் நாங்கள் ஒன்றுசேர்த்திருந்தோம். நான் இந்த குறைகளை அவ்வப்போது மேலதிகாரிகளிடம் எடுத்துக் கூறி வந்தேன். அந்த அதிகாரி கோபம் அடைந்து அவரை அழைக்கவும் செய்தார். ஆனால் அவர் முன்னால் வந்ததுமே நெருப்பின் மீது தண்ணீர் ஊற்றப்படுவது போன்று அந்த மேலதிகாரியின் கோபம் குளிர்ந்து விடும். மிகவும் மென்மையுடன் சாதாரணமாக அவரை கண்டித்து விட்டு விட்டு விடுவார். அவரிடம் எந்தக் குற்றமும் நிகழாதது போன்றே நடந்து கொள்வார்.

ஆக, தக்வாவும், அல்லாஹ்வுடன் தொடர்பும் இருந்தால் பிறகு எந்த துன்பமும் எந்த இழப்பையும் ஏற்படுத்த முடியாது. எந்தவொரு முயற்சியும் இழப்பை ஏற்படுத்த முடியாது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இந்த விஷயத்தையும் நன்றாக நினைவில் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும் பலன் இருக்கின்றது. உலகில் பாருங்கள்! உயர்ந்த தரத்திலுள்ள செடி, கொடிகளிலிருந்து கிருமிகள், எலிகள் ஆகியவை கூட மனிதனுக்கு பயன் தராமல் இல்லை. விண்ணிலும் மண்ணிலும் இருக்கின்ற இந்த எல்லா பொருள்களும் அல்லாஹ்வின் பண்புகளில் நிழல்களாகவும் பிம்பங்களாகவும் இருக்கின்றன. இந்த பண்புகள் முழுக்க முழுக்க பயனளிக்கக்கூடியவையாக இருக்கும் போது அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் போது அது எந்த அளவு பயனளிக்கக் கூடியதாக இருக்கும்?

இந்த இடத்தில் இந்த விஷயத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த பொருள்கள் மூலமாக எப்போதாவது இழப்பு ஏற்படுகின்றது என்றால், அது மனிதன் அவற்றை தவறாகப் பயன்படுத்துவதன் விளைவாகவும் புரிந்து கொள்ளாததனாலும் தான் ஏற்படுகின்றது. மாறாக, அடிப்படையான விஷயத்தில் இந்த பொருள்களில் இழப்பை ஏற்படுத்தக்கூடிய எதுவும் வைக்கப்படவில்லை. மாறாக தனது தவறின் காரணமாகவே இழப்பு ஏற்படுகின்றது. இவ்வாறே அல்லாஹ்வின் சில பண்புகளைப் பற்றிய அறிவு நமக்கு இல்லாமல் இருப்பதன் காரணமாக நாம் துன்பங்களிலும் துயரங்களிலும் வீழ்ந்து விடுகின்றோம். ஆனால் இறைவன் எப்போதும் கருணை காட்டக்வடியவனாகவே இருக்கின்றான். உலகில் துக்கமும் துயரமும் ஏற்படுவதன் இரகசியம் இதில்தான் உள்ளது. அதாவது நாம் நமது தீய புரியும் திறன் மற்றும் தீமையான அறிவின் காரணமாக நமது கைகள் மூலமாகவே துன்பங்களில் சிக்கி விடுகின்றோம்.

ஏன் இவ்வாறான துன்பங்கள் வருகின்றன? என பலரும் கேள்வி கேட்கின்றனர். துன்பங்கள் நமது தவறின் காரணமாகவே வருகின்றது. இந்த இறை பண்புகளின் கண்கள் மூலமாகவே பல நாட்களாக நாம் இறைவனை மிகவும் கருணையுள்ளவனாகவும் ரஹீமாகவும் அளவற்ற பயன்களைத் தருபவனாகவும் காண்கின்றோம்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இத்தகைய பயன்களிலிருந்தும் எவர் இறைவனுக்கு மிக அருகில் இருப்பவராகவும் அவனை நெருங்குபவராகவும் இருக்கின்றாரோ அவர் தான் பயன்பெற முடியும். இறையச்சமுடையவர்கள் என்று அழைக்கப் –படுபவர்களுக்கே இந்த தகுதி கிடைக்கின்றது. இவர் அல்லாஹ்வின் அருகில் இடம்பிடித்துக் கொள்கின்றனர். இறையச்சமுள்ளவர் இறைவனுக்கு நெருக்கமாக செல்லச் செல்ல ஒரு நேர்வழியின் ஒளி அவருக்கு கிடைக்கின்றது. அது அவரது அறிவில் ஒரு சிறப்பான ஒளியை உருவாக்கி விடுகின்றது. இறைவனை விட்டு விலகி தொலைவில் செல்லச் செல்ல அவனை அழிக்கின்ற இருள் அவனது உள்ளத்தையும் மூளையையும் ஆக்கிரமித்துக் கொள்கின்றது.

எதுவரையென்றால் அவர்கள்

صُمٌّ بُكْمٌ عُمْىٌ فَهُمْ لَا يَرْجِعُوْنَ

*அவர்கள் செவிடர்கள்; ஊமையர்கள்; குருடர்கள். அவர்கள் திரும்புவதில்லை. (2:19)* என்ற நிலைக்கு ஒத்தவர்களாக ஆகிவிடுகின்றனர். அதற்கு எதிரில் ஒளியாலும் பிரகாசத்தாலும் பலனடைந்த மனிதன் மிக உயர்வான நிலையிலுள்ள சுகத்தையும் கண்ணியத்தையும் பெறுகின்றான்.

அவர்கள் தொடர்பாக இறைவன்,

يَاۤ اَيَّتُهَا النَّفْسُ الْمُطْمَئِنَّةُ ارْجِعِىۤ اِلٰى رَبِّكِ رَاضِيَةً مَّرْضِيَّةً *(89:29)*

அதாவது நிம்மதியடைந்த ஆன்மாவே! இந்த நிம்மதியை இறைவனுடன் ஒன்றியதன் காரணமாக நீ பெற்றுள்ளாய். சில மக்களுக்கு வெளிப்படையாகப் பார்க்கும் போது அவர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து நிம்மதியும் நிறைவும் கிடைக்கின்றது. சிலருக்கு நிம்மதியும் நிறைவும் கிடைப்பதற்கு அவர்களது செல்வமும் கண்ணியமும் காரணமாக இருக்கின்றது. சிலர் தங்களது அழகான திறமையான சந்ததிகளைப் பார்த்து பல சந்தர்ப்பங்களிலும் உதவுபவர்களைப் பார்த்து அவர்கள் மூலமாக நிம்மதி கிடைத்திருப்பதாகக் கருதுகின்றனர். இந்த பல வகையிலுள்ள உலக இன்பங்கள் மனிதனுக்கு உண்மையான ஆறுதலையும் வழங்க முடியாது. மாறாக அது ஒரு விதமான தூய்மையற்ற ஆசையை உருவாக்கி மேலும் கேட்பதையும் தாகத்தையும் அது உருவாக்கி விடுகின்றது. தாகமுள்ள ஒரு நோயாளியைப் போன்று அவர்களது தாகம் தணியாது. எதுவரையென்றால் அது அவர்களை அழித்து விடுகின்றது. உலகவாதிகள் உலகத்தின் பின்னால் மட்டும் சென்று இறுதியில் அழிந்து விடுகின்றனர்.

**ஆனால் இங்கு இறைவன் கூறுகின்றான்:**

எந்த ஆன்மா தனது நிம்மதியை இறைவனுடன் ஒன்றி விடுவதன் மூலமாக பெற்றுக் கொண்டதோ அத்தகைய ஆன்மாவை உடைய அடியாருக்கு இந்த உயர்வான தகுதி கிடைப்பது சாத்தியமாகி விடும். அதாவது இந்த சமயத்தில் செல்வங்கள், செழிப்பான நிலை, உலகப் பொலிவுகள், இன்பங்கள் ஆகியவை இருந்தும் கூட அவருக்கு மகிழ்ச்சியான நிலைமை இறைவனுடன் ஒன்றிவிடுவதன் மூலமாகவே கிடைக்கின்றது. இந்த தங்கமும், இரத்தினங்களும், உலகமும் அதிலுள்ள ஈடுபாடும் அவருக்கு உண்மையான சுகத்தை வழங்காது. எதுவரை மனிதன் இறைவனிடமிருந்து நிம்மதியையும் சுகத்தையும் பெறவில்லையோ அதுவரை அவன் இரட்சிப்பைப் பெற முடியாது. ஏனென்றால், இரட்சிப்பு என்பது நிம்மதி என்பதன் மறுபெயராகும்.

நிம்மதி அடைந்த ஆன்மா இல்லாமல் மனிதன் இரட்சிப்பைப் பெற முடியாது என்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நான் சில மனிதர்களைப் பார்த்துள்ளேன். பெரும்பாலாரது நிலைமைகளைப் பற்றி படித்துள்ளேன். உலகிலுள்ள பொருளும், செல்வமும், உலகின் பொய்யான இன்பங்களும், சந்ததிகள், வேலையாட்கள் போன்ற எல்லா விதமான அருள்களும் அவர்களிடம் இருக்கின்றது. அவர்கள் மரணிக்கும் போது இந்த உலகை விட்டு விட்டுச் செல்வதும் அத்துடன் இந்தப் பொருள்களை விட்டு விட்டு மறுவுலகிற்குச் செல்ல வேண்டும் என்பதைப் பற்றி தெரிய வரும்போது அவர்கள் மீது வேதனையும் தேவையற்ற ஆசைகளின் நெருப்பும் கொழுந்து விட்டு எரிகின்றது. அவர்கள் வேதனைகளால் கத்த ஆரம்பித்து விடுகின்றனர். இதுவும் ஒருவிதமான நரகமாகும். அது மனிதனின் உள்ளத்திற்கு நிம்மதியையும் சுகத்தையும் வழங்க முடியாது. அது அவனை பயம் மற்றும் அமைதியற்ற உலகில் போட்டு விடுகின்றது. எனவே, இந்த விஷயமும் நமது நண்பர்களிடமிருந்து மறைவானதாக இருக்கக் கூடாது. பெரும்பாலான சமயங்கள் மனிதன் மனைவி மக்கள், செல்வம் ஆகியவற்றின் மீதுள்ள அனுமதிக்கப்படாத தகாத பொருத்தமற்ற அன்பில் எந்த அளவு மூழ்கி விடுகின்றார் என்றால், (அன்பு இருக்க வேண்டும் தான். ஆனால் அனுமதிக்கப்படாத பொருத்தமற்ற அன்பாக அது இருக்கக் கூடாது). பெரும்பாலான சமயங்களின் இந்த அன்பின் போதை மற்றும் வேகத்தின் காரணமாக அனுமதிக்கப்படாத எத்தகைய தகாத செயல்களைச் செய்து விடுகின்றார் என்றால் அது அவனுக்கும் இறைவனுக்கும் இடையில் ஒரு திரையை உருவாக்கி விடுகின்றது. அது அவனுக்காக நரகத்தைத் தயாராக்கி விடுகின்றது. அவனுக்கு இதைப் பற்றிய அறிவு இருப்பதில்லை. இவை அனைத்தையும் விட்டு அவன் பிரிக்கப்படும் போது அந்த நேரம் பற்றி அவனுக்கு தெரியாது. அப்போது அவன் மிகுதியாக அமைதியின்மையில் மூழ்கி விடுகின்றான். இந்த விஷயத்தை மிக எளிதாக புரிந்து கொள்ள முடியும். ஒரு பொருளின் மீது அன்பு இருந்தால் அதை விட்டும் பிரியும் போது ஒரு துக்கமும், வேதனை நிறைந்த துயரமும் உருவாகி விடுகின்றது. இந்த விஷயம் வெறும் எழுத்தில் மட்டுமின்றி அறிவுப்பூர்வமான விஷயமாகவும் இருக்கின்றது.

இதைப் பற்றியே அல்லாஹ்

نَارُ اللّٰهِ الْمُوْقَدَةُ ۙ۝٧ الَّتِيْ تَطَّلِعُ عَلَى الْاَفْـِٕدَةِ ؕ۝٨

*அது அல்லாஹ்வால் எரியச் செய்யப்பட்ட நெருப்பாகும். அது உள்ளங்களில் பாய்ந்து செல்லும். (104:7-8)* என்று கூறுகின்றான். இது அல்லாஹ் அல்லாதவற்றின் மீதுள்ள அன்பின் நெருப்பாகும். அது மனிதனின் உள்ளத்தை எரித்து சாம்பலாக்கி விடுகின்றது. வியப்பில் ஆழ்த்துகின்ற தண்டனையிலும் வேதனையிலும் அவனை ஆழ்த்தி விடுகின்றது. நான் மீண்டும் கூறுகின்றேன். இது முற்றிலும் உண்மையான உறுதியான விஷயமாகும். நிம்மதி அடைந்துள்ள ஆன்மா இல்லாமல் இரட்சிப்பைப் பெற முடியாது.

***பிறகு ஜமாஅத்திற்குப் போதனை செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

அல்லாஹ் நல்லடியார்களைத் தவிர எவரையும் பொருட்படுத்துவதில்லை. எனவே, பரஸ்பரம் உங்களுக்கிடையே சகோதரத்துவத்தையும் அன்பையும் உருவாக்குங்கள். காட்டுமிராட்டித் –தனத்தையும் கருத்து வேறுபாடுகளையும் விட்டு விடுங்கள். எல்லா விதமான பரிகாசம் மற்றும் எள்ளி நகையாடுவதிலிருந்தும் முற்றிலுமாக விலகி விடுங்கள். ஏனென்றால், பரிகாசம் செய்வது மனிதனின் உள்ளத்தை உண்மையிலிருந்தும் விலக்கி வைத்து எங்கோ கொண்டு சென்று விடும். பரஸ்பரம் உங்களில் ஒருவர் மற்றவருடன் கண்ணியமாக நடந்து கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் தனது சுகத்தை விட தனது சகோதரனின் சுகத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அல்லாஹ்விடத்தில் ஓர் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அவனுக்கு கட்டுப்பட்டு நடப்பதன் பக்கம் திரும்பி வாருங்கள். அல்லாஹ்வின் கோபம் பூமியில் இறங்கிக்

கொண்டிருக்கின்றது. அதிலிருந்தும் தப்பிக்கக்கூடியவர்கள் முழுமையான முறையில் தங்களது எல்லா பாவங்களிலிருந்தும் தவ்பா செய்தவாறு அவனது சமூகத்தில் வருபவர்களாவர்.

நீங்கள் நினைவில் கொள்ளுங்கள்! நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டு அவனது மார்க்கத்திற்கு உதவி செய்வதற்கு முயற்சி செய்பவராக ஆகி விட்டால் பிறகு இறைவன் எல்லா தடைகளையும் அகற்றி விடுவான். நீங்கள் வெற்றி பெற்றவர்களாக ஆகி விடுவீர்கள். சிறந்த செடி, கொடிகள் வளர வேண்டும் என்பதற்காக பயனற்ற பொருள்களை விவசாயி வயலிலிருந்தும் பிடுங்கி எறிவதை நீங்கள் பார்த்ததில்லையா? அவர் தனது வயலை அழகான மரங்களாலும், செழிப்பான செடி கொடிகளாலும் அலங்கரிக்கின்றார். அதைப் பாதுகாக்கின்றார். ஒவ்வொரு இழப்பிலிருந்தும் அதனைப் பாதுகாக்கின்றார். ஆனால் அந்த மரம் அல்லது செடி பழங்களைத் தராமல் அழுகிப் போனால் அல்லது காய்ந்து போனால் அதன் எஜமானன் அதைப் பற்றி கவலைப்பட மாட்டான். ஏதாவதொரு விலங்கு வந்து அவற்றை தின்று விட்டாலோ அல்லது விறகு வெட்டுபவன் அவற்றை வெட்டி நெருப்பில் போட்டாலும் அவன் அதை பொருட்படுத்தமாட்டான்.

அவ்வாறே நீங்களும் நினைவில் கொள்ளுங்கள்! நீங்கள் அல்லாஹ்வின் முன்பு உண்மையாளர்களாகத் திகழ்ந்தால் எவரது எதிர்ப்பும் உங்களுக்கு துன்பத்தைத் தராது. ஆனால் நீங்கள் உங்களது நிலைமைகளைச் சரி செய்யவில்லை என்றால், அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவது தொடர்பாக ஓர் உண்மையான உடன்படிக்கையைச் செய்து கொள்ளாமல் இருந்தால் பிறகு அல்லாஹ் யாரையும் பொருட்படுத்த மாட்டான். ஆயிரக்கணக்கான செம்மறி ஆடுகளும், ஆடுகளும் நாள்தோறும் அறுக்கப்படுகின்றன. ஆனால் அவற்றின் மீது யாரும் ஆட்சேபனை செய்வதில்லை. ஆனால் ஒரு மனிதன் கொலை செய்யப்பட்டால் எந்த அளவு கேள்வி கேட்கப்படுகின்றது. நீங்கள் உங்களை விலங்குகள் போன்று பயனற்றவர்களாகவும் கவலையற்றவர்களாகவும் ஆக்கிக் கொள்வீர்கள் என்றால் உங்களது நிலைமையும் இது போன்றே ஆகிவிடும். இறைவன் உங்களைப் பொருட்படுத்தமாட்டான். நீங்கள் இறைவனுக்கு பிரியமானவர்களில் ஒருவராக ஆகிவிட வேண்டும். அதன் மூலம் எந்தவொரு நோயிற்கும், ஆபத்திற்கும் உங்கள் மீது கை வைப்பதற்கு தைரியம் வரக்கூடாது. ஏனென்றால், எந்தவொரு விஷயமும் இறைவனின் அனுமதி இல்லாமல் பூமியில் நடைபெற முடியாது. உங்களுக்கிடையில் இருந்து வரும் சண்டைகள், பகைமை ஆகியவற்றை உங்களிடமிருந்து அகற்றி விடுங்கள். இது நீங்கள் சிறு சிறு விஷயங்களிலிருந்து விலகி நின்றவாறு மகத்தான மணிகளில் உங்களில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய நேரமாகும்.

***தொடர்ந்து கூறுகின்றார்கள்:*** இந்த விஷயத்தை நான் கூறும் உயில் ஆக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒருபோதும் கடுமை காட்டுவதன் மூலமாக எந்த பணியையும் செய்ய வைக்காதீர்கள். எப்போதும் மென்மையுடன் புரிய வையுங்கள். உணர்வுகளை அவை பொங்கி எழும் வகையில் விட்டு விடாதீர்கள்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இனி வருங்காலத்திற்காக நினைவில் வையுங்கள். சகோதரத்துவத்தின் உரிமைகளைப் பேணாமல் ஒருபோதும் விட்டு விடாதீர்கள். அவ்வாறு அந்த உரிமைகளைப் பேணாமல் இருந்தால் அல்லாஹ்விற்குச் செலுத்த வேண்டிய உரிமைகளையும் செலுத்த முடியாது.

***தொடர்ந்து அவர்கள் கூறுகின்றார்கள்:*** எனக்கு இதுவே கூறப்பட்டுள்ளது.

*(13:12)* إِنَّ اللّٰهَ لَا يُغَيِّرُ مَا بِقَوْمٍ حَتّٰى يُغَيِّرُوْا مَا بِأَنْفُسِهِمْ

மக்கள் தங்கள் உள்ளங்களில் மாற்றத்தை ஏற்படுத்தாத வரையில் அல்லாஹ் எந்நிலையிலும் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த மாட்டான். இந்த விஷயங்களைக் கேட்டு விட்டு ஒவ்வொருவரும் இதற்கு பதில் கூறுவதற்குத் தயாராகி விடுகின்றார். நாங்கள் தொழுகின்றோம். இஸ்திக்ஃபார் செய்கின்றோம்? பிறகு ஏன் துன்பங்களும் சோதனைகளும் வருகின்றன? என்று அவர்கள் கேட்கின்றனர். அசல் விஷயம் என்னவென்றால் இறைவன் கூறுகின்ற விஷயங்களை யார் புரிந்து கொள்கின்றார்களோ அவரே நற்பாக்கியம் பெற்றவராக இருக்கின்றார். அல்லாஹ்வின் விருப்பம் வேறு விதமாக இருக்கும். அது வேறு விதமாக புரிந்து கொள்ளப்படுகிறது. பிறகு தனது அறிவு மற்றும் செயலின் அளவுகோல் மூலமாக அது அளக்கப்படுகின்றது. இது சரியல்ல. ஒவ்வொரு பொருளையும் அதற்கென்று நியமிக்கப்பட்டுள்ள அளவுக்கு குறைவாக பயன்படுத்தப்படும் போது அதில் வைக்கப்பட்டுள்ளதிலிருந்து ஒருவர் பலன் பெற முடியாது. உதாரணமாக, ஒரு மருந்தை ஒரு கிராம் அளவு சாப்பிடுவதற்குப் பதிலாக அதன் ஒரு துளியை மட்டும் அருந்தினால் அதனால் என்ன பயன்? ஒருவர் ரொட்டியைச் சாப்பிடுவதற்குப் பதிலாக ஒரு நெல்லை சாப்பிடுவதால் அவருக்கு நிறைவு ஏற்படுமா? ஒரு குவளை தண்ணீரை அருந்துவதற்குப் பதிலாக ஒரு துளி தண்ணீர் அவரது தாகத்தைத் தணிக்க முடியுமா? ஒருபோதும் அவ்வாறு நடக்காது. இதுவே செயல்களின் நிலையும் ஆகும்.

எதுவரை அவை அதற்குரிய அளவிற்கேற்ப செய்யப்படவில்லையோ அதுவரை அது உயரே செல்ல முடியாது. இது அல்லாஹ்வின் நடைமுறையாகும். இதை நாம் மாற்ற முடியாது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

தனது சகோதரருடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது ஸதகா மற்றும் தான தருமங்கள் செய்வது போன்றதேயாகும். இந்த உரிமை அடியார்களுக்குரிய உரிமையாகும். இது கடமையாக்கப்பட்டதாகும். அல்லாஹ் எவ்வாறு நோன்பு நோற்பதையும் தொழுகையையும் தனக்காகச் செய்யும்படி கடமையாக்கியுள்ளானோ அவ்வாறே அடியார்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாப்பதையும் கடமையாக்கியுள்ளான்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

எவர்கள் அனுதாபத்துடன் நடந்து கொள்வதைக் கைவிட்டு விடுகின்றனரோ அவர்கள் மார்க்கத்தை கை விட்டு விடுகின்றனர்.

திருக்குர்ஆன் கூறுகிறது:

*(5:33)* مَنْ قَتَلَ نَفْسًا بِغَيْرِ نَفْسٍ أَوْ فَسَادٍ

எந்த நபர் ஒருவரை காரணமின்றி கொலை செய்து விடுகின்றாரோ அவர் முழு மனித குலத்தையும் கொன்றவர் போல் ஆவார். அவ்வாறே நான் இதையும் கூறுகின்றேன். ஒரு நபர் தனது சகோதரனுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ளவில்லையென்றால் அவர் முழு உலகத்தில் உள்ளவர்களிடமும் அனுதாபத்துடன் நடந்து கொள்ளவில்லை. ஈமான் பறிபோய் விடும் அளவில் வாழ்க்கையின் மீது நேசம் கொள்ளாதீர்கள். சகோதரத்துவத்தின் உரிமைகளை ஒருபோதும் கைவிட்டு விடாதீர்கள். இந்த விஷயங்களை நாம் புரிந்து கொண்டால், நமது பல சண்டைகளும், பகைமையும், வழக்குகளும் முடிவுக்கு வந்து விடும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

எல்லா அருள்களும் ஈமானுடன் தொடர்புடையவையாக இருக்கின்றது. ஈமானுக்கு வலுவூட்டுங்கள். உரிமைகளைத் தராமல் இருப்பது பாவமாகும். ***தொடர்ந்து கூறுகின்றார்கள்:*** இறைவன் இந்த ஜமாஅத்தை ஒரு முன்மாதிரியாக ஆக்க விரும்புகின்றான். சகோதரத்துவமும் அனுதாபத்துடன் நடந்து கொள்வதும் இல்லாத நிலை இந்த ஜமாஅத்திலும் ஏற்பட்டு விட்டால் அது மிகப்பெரும் மோசமான நிலையாக இருக்கும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நமது ஜமாஅத்தின் மீது எதிரிகளுக்கு வெறுப்பு இருந்து வருகிறது. அவர்கள் இந்த ஜமாஅத் அழிந்து விட வேண்டும் என்று விரும்புகின்றனர். அவர்கள் நினைவில் வைக்க வேண்டும். நான் எனது எதிரிகளிடம் அவர்களுக்கு நம்மீது வெறுப்பு இருந்தும் கூட அவர்களுடன் ஒரு விஷயத்தில் ஒருமித்த கருத்தை உடையவனாக இருக்கின்றேன். அது இதுவாகும். இறைவன் இந்த ஜமாஅத் பாவங்களிலிருந்து தூய்மையானதாக இருக்க வேண்டும் என்று விரும்பியுள்ளான். மேலும் அவர்கள் தங்கள் நடைமுறையில் சிறந்த முன்மாதிரியைக் காட்ட வேண்டும். திருக்குர்ஆனின் உண்மையான போதனைகளை உண்மையான முறையில் செயல்படுத்த வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதில் தங்களை மாய்த்துக் கொள்ள வேண்டும். அவர்களில் ஒருவருக்கு மற்றவர் மீது வெறுப்பும் காழ்ப்புணர்ச்சியும் இருக்கக் கூடாது. அது இறைவனுடன் முழுமையான உண்மையான அன்பை செலுத்துகின்ற ஜமாஅத்தாக இருக்க வேண்டும். ஆனால் ஏதாவதொரு நபர் இந்த ஜமாஅத்தில் இணைந்த பிறகும் இந்த நோக்கத்தை நிறைவேற்றாமலும் தனது செயல்கள் மூலம் உண்மையான மாற்றத்தை வெளிப்படுத்தாமலும் இருந்தால் அவர் நினைவில் கொள்ள வேண்டும். அவர் எதிரியின் ஆசையை நிறைவேற்றக் கூடியவராக ஆகி விடுவார். நிச்சயமாக அந்த எதிரியின் முன்னால் இவர் அழிந்து போய் விடுவார். அல்லாஹ்வுடன் எவருக்கும் எந்த உறவும் இல்லை. அவன் யாரையும் பொருட்படுத்தமாட்டான். தங்களை நபிமார்களின் சந்ததிகள் என்று கூறியவர்கள் அதாவது இஸ்ரவேல் சந்ததிகளில் அதிகமான நபிமார்களும் இறைதூதர்களும் வந்தனர். அல்லாஹ்வின் மகத்தான அருள்களுக்கு வாரிசாகவும் அதற்கு உரிமை பெற்றவர்களாகவும் அவர்கள் திகழ்ந்தனர். ஆனால் எப்போது அவர்களது ஆன்மீக நிலைமை சீர்குலைந்து அவர்கள் தமது நேரான வழியைக் கைவிட்டனரோ, மேலும் கிளர்ச்சி செய்தல், குழப்பம், தீமை ஆகியவற்றை செய்தனரோ அதன் விளைவு என்ன? அவர்கள்,

*(3:62)* وَضُرِبَتْ عَلَيْهِمُ الذِّلَّةُ وَالْمَسْكَنَةُ

அவர்களுக்கு இழிவும் தோல்வியும் ஏற்பட்டது என்பதற்கு பொருந்தக் கூடியவர்களாக அவர்கள் ஆகிவிட்டனர். இறைவனது கோபம் அவர்கள் மீது பாய்ந்தது.

இது எந்த அளவு படிப்பினை பெற வேண்டிய இடமாக இருக்கின்றது. இஸ்ரவேல் சந்ததிகளின் நிலைமை எல்லா சமயத்திலும் பயன் தருகின்ற பாடமாக இருக்கின்றது. இவ்வாறே இறைவன் தனது கைகளால் உருவாக்கிய இந்த சமுதாயம் எப்படிப்பட்ட சமுதாயம் என்றால் அல்லாஹ் இதற்கு பெரும் பெரும் அருள்களை வழங்குவான். ஒருவர் இந்த ஜமாஅத்தில் இணைந்த பிறகு இறைவனுடன் உண்மையான அன்பு கொள்ளாமலும், ரஸூல் (ஸல்) அவர்களை உண்மையாகவும் முழுமையாகவும் பின்பற்றாமல் இருந்தால் அவர் சிறியவராக இருந்தாலும் பெரியவராக இருந்தாலும் அவர் வெட்டி எறியப்படுவார். இறைவனின் கோபத்தின் அடையாளமாக ஆகி விடுவார். எனவே, நீங்கள் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்துங்கள். ஜமாஅத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துபவர்களாக ஆகி விடாதீர்கள்.

எனவே, இந்த தரத்தைப் பெற நாம் அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். தக்வாவிற்கேற்ப நடப்பதும் தமது செயல்களைச் சீர்திருத்துவதும் தனது ஈமானின் தரத்தை உயர்த்துவதும் ஆகிய இந்த விஷயங்கள் சாதாரண விஷயங்கள் அல்ல. நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம். எனவே, அவர்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நாம் முழுமையான முறையில் முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொரு சிறிய சிறிய நன்மைகளையும் நாம் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் ஒவ்வொரு தீமையையும் முழுமையான முறையில் நாம் வெறுக்க வேண்டும். அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. நம்மில் பரஸ்பரம் ஒருவர் மற்றவரது உதவியாளராக ஆக வேண்டிய தேவை இருக்கின்றது. அப்போது தான் நாம் செய்துள்ள பைஅத்தின் உரிமையைச் செலுத்துபவர்களாக நாம் ஆக முடியும். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

இன்று நான் மீண்டும் உங்களுக்கு நினைவூட்டும் வகையில் இஸ்லாமிய நாடுகளுக்காக குறிப்பாக சிரியா, எகிப்து போன்ற நாடுகளில் குழப்பம் இருந்து வருவதாலும் மிக அதிகமாக அங்கு கொடுமைகள் இழைக்கப்படுவதாலும் அவர்களுக்காக துஆ செய்யும்படி கூற விரும்புகின்றேன். இவ்வாறே பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகளுக்கும் துஆ செய்யுங்கள். அங்குள்ள அஹ்மதிகள் மீது பெரும் அநீதி இழைக்கப்படுகின்றது. எல்லா தரப்பிலிருந்தும் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட மாட்டாது என்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளனர். அல்லாஹ் அவர்கள் அனைவரையும் தனது பாதுகாப்பின் கீழ் வைப்பானாக! மேலும் எவர்கள் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாகவும் அமைதியை சீர்குலைப்பவர்களாகவும் இருக்கின்றாரோ அல்லாஹ் விரைவில் அவர்களைப் பிடிப்பானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **07.02.2014**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456